# புதிய சிருஷ்டியான நீ.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே ! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் தொடக்கம் **" மறுபடியும் பிறப்பது ".** உலகத்தில் பிறக்கும் எந்த மனிதரும் பாவியாகவே பிறக்கிறார். அவர் இயேசு கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டு ரட்சிக்கப்படும்போது ஒரு புதிய சிருஷ்டி ஆகிறார். இந்த மறுபடியும் பிறக்கும் அனுபவம் இல்லாத எந்த ஒரு மனிதரும், அவர் எந்த சபையில் பிறந்திருந்தாலும், எவ்வளவு பரிசுத்தமாக வாழ்ந்தாலும், எவ்வளவு வேதம் படித்திருந்தாலும், எவ்வளவு பக்தியாக இருந்தாலும், எவ்வளவு கொடுத்திருந்தாலும் **" பரலோக ராஜ்யத்தை காண முடியாது "** என்று இயேசு கிறிஸ்து மிகவும் திட்டமாக கூறுகிறார். ஒருவேளை நமது தாய், தகப்பன், உறவினர், பெரியவர்கள், நண்பர்கள், உலகில் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் உடையவர்கள் சொல்லலாம் " அப்படி அல்ல " என்று. ஒருவேளை நாம் இவர்கள் சொல்லுவதை கேட்டால் சில குறிப்பிட்ட இடங்களில், சில குறிப்பிட்ட காலங்களுக்கு, சில குறிப்பிட்ட ஆதாயங்கள் கிடைக்கும். ஆனால் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் உள்ளவர் சொல்கிறார், **" மறுபடியும் பிறக்க வேண்டும் "** என்று. இயேசு சொல்வதை நம்பினால் நித்தியகாலமாக அவர் வாக்குதத்தம் பண்ணி இருக்கிற எல்லாம் கிடைக்கும். பரலோக ராஜ்யத்தை காண ஒரே வழி **" மறுபடியும் பிறப்பது ".** எந்த மதமும், எந்த வழியும், எந்த சத்தியமும், எந்த சபையும், எந்த பாரம்பரியமும் யாரையும் பரலோக ராஜ்யத்துக்கு அழைத்து செல்ல முடியாது. அங்கு செல்ல ஒரே வழி, நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்று அறைகூவல் விடுத்த இயேசு சொன்ன, " மறுபடியும் பிறப்பது ". இப்படி **நீங்கள் மறுபடியும் பிறந்தவராக இருந்தால்**, உங்களை வேதாகமம் அழைப்பது, " **பரிசுத்தவான், நீதிமான், தேவனுடைய பிள்ளை, தேவனுடைய சுதந்தரர் (heirs of God), கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர் ( joint-heirs with Christ ), புதிய சிருஷ்டி, தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, தேவனுடைய சொந்த ஜனம், தேவனால் பிறந்தவன், தேவனுடைய நீதி உள்ளவன்......**

இவற்றை எல்லாம் படிக்கும்போது நமக்கு ஒரு உற்சாகம் பிறக்கும், கண்களை மூடிக்கொண்டு ஜெபிக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கும். இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லி பிரசங்கிக்கும்போது பலரும் உற்சாகத்துடன் துள்ளி குதிப்பார்கள். பின் கண்திறந்து பார்க்கும்போது, ஜெபவேளை முடிந்த பிறகு, பிரசங்கம் நிறுத்தப்பட்ட பிறகு, வல்லமையான துதி ஆராதனை முடிந்து வீட்டுக்கு வேலையிடத்துக்கு திரும்பிவரும்போதோ........சகலமும் வித்யாசம். வேதனையோடு, பிரச்சினைகளோடு, பாடுகளோடு, துன்பங்களோடு, துயரங்களோடு, பணக்கஷ்டத்தோடு, குடும்பபிரச்சினைகளோடு, பலவிதமான வலிகளோடு, பெயர் கூட தெரியாத பல நோய்களோடு.... **அதே சரீரம்**. பயத்தின் நினைவுகளோடு, பழைய நினைவுகளோடு, ஏமாற்றங்களோடு, வேதனைகளோடு, ஆறாத புண்களோடு, வேண்டாத சிந்தனைகளோடு, டென்ஷன் நிலையோடு, **.........அதே மனது**. அதே வேலை. அதே கணவன், மனைவி. அதே இடம். அதே கடன், வறுமை, துன்பம், துயரம், கோபம், தனிமை.

என்னுடைய வேதபாட வகுப்புகளில், கேள்வி பதில் நேரங்களில் நான் அதிகமாக சந்திக்கிற ஒரு முக்கியமான கேள்வி, **" மறுபடியும் பிறந்திருக்கிறோம், ஞானஸ்நானம் எடுத்திருக்கிறோம், அபிஷேகம் பெற்றிருக்கிறோம் என்று பலரும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களது பேச்சில், நடத்தையில், செய்கைகளில் ஒரு மாற்றமும் இல்லையே ஏன் ? ".** வேத வசனம் சொல்லுகிறது இவர்கள் மறுபடியும் பிறந்தது சத்தியம். ஆனால் உலகம் சொல்லுகிறது எங்களால் இவர்கள் மறுபடியும் பிறந்ததன் ஒரு அடையாளத்தையும் காணமுடிவதில்லை.

மறுபடியும் பிறந்த விசுவாசிகளுக்கும் குழப்பம். எது உண்மை. என் ஐம்புலன்களால் நான் அறிவதும், நிஜமாக நான் அனுபவிப்பதும், உணர்வதும், நடப்பதும், இருப்பதும் உண்மையா ? அல்லது வேத வசனம் சொல்வது உண்மையா ?. இதற்கு பதில் சொல்லப்போனால் ஒருவிதத்தில் " இரண்டுமே உண்மை ". ஆனாலும், நாம் காண்பது **' உண்மை '** ( true ) ஆனால் அவைகள் **' சத்தியம் அல்ல '** ( not truth ). ஆனால் வேத வசனமோ அது **" சத்தியம் " ( truth ).** ***( ரோமர்; 3;4 ).*** வேத வசனம்

சத்தியம் என்றால் வேத வசனம் என்னை பற்றி சொல்வதெல்லாம் சத்தியமே. இந்த சத்தியத்தை இப்போது நாம் அறிந்து கொள்ளப்போகிறோம்.

முதலாவது " **மறுபடியும் பிறந்த உங்களைப்பற்றி** " வேதாகமம் சொல்லுகிற சில வசனங்களை பார்ப்போம்.

*2கொரிந்தியர் 5 17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

*1 கொரிந்தியர்; 6; 11 ; உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

*1 கொரிந்தியர் 6 17. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*

*1யோவா 2:20 நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.*

*1யோவா 2:27 நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; ..........*

*1யோவா 3:9 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.*

*1யோவா 4:4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.*

*1யோவா 4:17 ............... அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.*

*1யோவா 5:4 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.*

*1யோவா 5:18 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.*

*1யோவா 5:19 நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.*

*2கொரி 5:21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

*1பேது 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

*கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

***2 கொரி 517 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.***


'கிறிஸ்துவுக்குள்' என்கிற பதம் புதிய ஏற்பாட்டில் சுமார் 300 முறை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பதம் எப்பொழுதும் 'தேவனோடு இணைக்கப்பட்ட ஒரு முக்கியமான உறவு நிலையை' குறிக்கிறது. இது நடக்கும் பொழுது ஒரு மனிதன் புது சிருஷ்டியாகிறான். இதில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் 'இந்த புதிய சிருஷ்டிப்பு நம் பௌதீக நிலையில் (மாம்ச ரீதியில் ) நடைபெறுவது அல்ல'.

இது சரீரத்தில் நடைபெறுவது அல்ல. ஒரு மனிதன் ரட்சிக்கப்படுவதற்கு முன்பு தடிமனான சரீரம் உள்ளவராக இருந்தால், ரட்சிக்கப்பட்ட பிறகும் அதே தடிமனான சரீரமே இருக்கும். அவரது நிறம், உயரம், சரீரத்தில் காணப்படும் அடையாளங்கள் எல்லாம் அப்படியே இருக்கும். ஆகவே இந்த புதிய சிருஷ்டிப்பு சரீரத்தில் நடைபெறுவது இல்லை.

இது மனதில், உணர்ச்சிகளில், சித்தத்தில் நடைபெறுவதும் அல்ல. ஒரு மனிதர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு எவ்வளவு அறிவு உள்ளவராக இருந்தாரோ, எந்த உணர்ச்சிகள் உள்ளவராக இருந்தாரோ, எந்த எண்ணங்களோடு இருந்தாரோ, இரட்சிக்கப்பட்ட பிறகும் அப்படியே இருப்பார். ஆகவே இந்த புதிய சிருஷ்டிப்பு நம் மனரீதியில் நடைபெறுவது இல்லை.

அப்படி என்றால் " **மாற்றப்பட்டது எது ?". " மாற்றம் நடந்தது எங்கே ? ". " புதிய சிருஷ்டியானது எது ?". " அது எங்கே இருக்கிறது?** இதற்கான விடைகளை அறிய, முதலில் " **நான்** " **யார்** என்று அறிந்து கொள்ளவேண்டும். வேதாகமம் நம்மை பற்றி குறிப்பிடும்போது நம்மை மூன்று பகுதிகள் உடையவர்களாக குறிப்பிடுகிறது. *1.தெசலோனியர்; 5;23. சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*
நம்முடைய மூன்று பகுதிகள் 1. **ஆவி.** 2. **ஆத்துமா** 3. **சரீரம்.** இந்த அடிப்படை சத்தியத்தை நாம் மனதிலாக்கிக்கொள்ளா விட்டால், வேதாகமத்தின் பல வார்த்தைகளுக்கும் நமக்கு அர்த்தம் புரியாது.

**தேவன் நம்மை சிருஷ்டித்த விதத்தை பார்ப்போம்.**
*ஆதி 2:7 தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*





இந்த ஆவி என்கிற பகுதிதான் நமக்கு ஜீவன் கொடுக்கிற பகுதி.( *யாக்கோபு; 2; 26. அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும்செத்ததாயிருக்கிறது.* ) ஆவிதான் உண்மையில் நாம் உயிர் வாழ தேவையான ஜீவனை நம் சரீர உறுப்புகளுக்கு கொடுக்கிறது. நம் ' **ஜீவன்** ' வருவது இந்த ஆவியில் இருந்துதான். மனிதனுடைய ஆவியே தேவனோடு உறவாடுவது *( யோவான் 4;24 ).* தேவன் மனிதனோடு தொடர்பு கொள்ளுவது ஆவியிலேயே *( யோவான் 4:24 ).* மனிதனுடைய ஆவி தேவ உணர்வு கொண்டது, தேவனுடைய சத்தத்தை அறிந்தது, நம் ஆவியே ஆவிக்கு ஊழியம் செய்ய முடியும் " *( ரோமர்; 1;9, 7;6, 12;11. )* நம் ஆவியே ஆவிக்குரியவைகளை அறிய முடியும். *( 1 கொரி; 2; 9-12. ).* நம் ஆவியே ஆவிக்கு ஆராதனை செய்ய முடியும் ( தொழுது கொள்ள முடியும் ) *( யோவான்; 4;23-24, பிலிப்பியர்; 3; 3; ).* நம் ஆவியே ஆவியிடம் இருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும். *( 1 கொரிந்தியர்; 2;10.)*

நம் ஆவியே ஆவிக்கு ஆராதனை செய்ய முடியும் ( தொழுது கொள்ள முடியும் ) *( யோவான்; 4;23-24, பிலிப்பியர்; 3; 3; ).* நம் ஆவியே ஆவியிடம் இருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும். *( 1 கொரிந்தியர்; 2;10.)*

தேவன் ஆவியாய் இருக்கிறார். மனிதன் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளை. தேவன் மனிதனை ஆவிக்குரியவனாகவே பார்க்கிறார். ( *ரோம 8:9 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.* ***But ye are not in the flesh, but in the Spirit****, if so be*

## மனிதன் பாவம் செய்யுமுன்பு.




*that the Spirit of God dwell in you. Now if any man have not the Spirit of Christ, he is none of his. )*
தேவன் நம்மை பெயர் சொல்லி அழைக்கும்போது அவர் குறிப்பிடுவது நம் ஆத்துமாவையோ சரீரத்தையோ அல்ல, நம் ஆவியை குறிப்பிடுகிறார். உங்களுடைய ஆவிதான் உண்மையில் " **நீ** ".


மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாமல், சாத்தானுக்கு கீழ்ப்படிந்து, புசிக்கக்கூடாது என்று விலக்கப்பட்டிருந்த கனியை புசித்த செயலினால் " பாவம் " ( பாவம் செய்ய தூண்டுகிற சக்தி, பாவப்பிரமாணம் ) உலகில் பிரவேசித்தது. ( *ரோம 5:12 இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.)*
ஆதாம் தேவனுக்கு கீழ்ப்படியாத செயலை செய்த நொடியிலேயே, அந்த செயலினால் உலகத்தில் பிரவேசித்த பாவத்துக்கு அடிமை ஆனான். ( *ரோம 6:16 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? )*
பாவ சுபாவமுள்ளவனானான். ( *எபே; 2;3, யோவான் 8:44, ரோமர் 5:19* ).

*ஆதியாகமம்; 2.17. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப்புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*
தேவனுடைய கட்டளை, நீ கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவாய். இங்கே **"சாவாய்"** என்ற வார்த்தை சரீர மரணத்தை குறிப்பிடுவது அல்ல. ஆதாம் இதற்குப்பின் 930 ஆண்டுகள் ( *ஆதி; 5:5* ) உயிரோடிருந்தான். சாவாய் என்ற வார்த்தை 'ஆவிக்குரிய மரணத்தை" குறிப்பிடுகிறது. வேதாகமத்தில் "மரணம்" என்னும் வார்த்தை "இனி இல்லாமல் போவது " என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. மரணம் என்ற வார்த்தைக்கு சரியான அர்த்தம் " பிரிவு ". "சரீர மரணம்" என்பது ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தில் இருந்து பிரிவது. "ஆவிக்குரிய மரணம்" என்பது மனிதனுடைய ஆவி தேவனுடைய ஆவியில் இருந்து பிரிக்கப்படுவது. ஆகவே 'சாவாய்' என்ற வார்த்தை "அவர்கள் தேவனிடம் இருந்து பிரிக்கப்படுவார்கள்" என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்த போது, அவனுடைய ஆவி - மனிதனுக்கு ஜீவனை கொடுத்து அவனை ஊக்குவிக்கும் ஆவி

- தேவன் ஊதிய ஜீவ சுவாசம் - "தேவனுடைய ஜீவனில் " இருந்து பிரிந்து விட்டது. தேவனுடைய ஜீவன் என்பது -இயற்கைக்கு அப்பாற்பட்டது. இது தேவனுடைய பரிசுத்த, பரிபூரண ஜீவன். இதைதான் வேதாகமம் " zoe " வாழ்வு, அல்லது 'பரிபூரண, முழுமையான ஜீவன் ' என்று குறிப்பிடுகிறது. மனிதனின் ஆவி இந்த தேவனுடைய ஜீவனில் இருந்து பிரிந்ததால் மனிதன் அழியத்தொடங்கினான். ஆவிக்குரிய மரணத்தினால் மனிதன் சரீர மரணமடைய தொடங்கினான்.

இப்போது தேவனுடைய ஆவியில் இருந்து பிரிந்த மனிதனுடைய ஆவி, தேவனோடு உள்ள தொடர்பை, தேவனைப்பற்றிய அறிவை, தேவனைப்பற்றிய உணர்வை, தேவனுடைய சத்தத்தை அறியும் திறனை இழந்தது. இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் ஆவியைத்தான் வேதாகமம் மரித்தது அல்லது மரித்த ஆவி என்று அழைக்கிறது. *எபேசியர். 2. 1. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.*

## மனிதன் பாவம் செய்த பிறகு....





இந்த நிலையில் இருக்கும் ஒரு மனிதன் வேத வசனத்தை கேட்டு *( 1 பேதுரு: 1:23 )* மறுபடி பிறக்கும்போது *( யோவான் 3:3 )* அவன் ஒரு புது ஆவியை பெற்றுக்கொள்கிறான். இந்த புது ஆவி இயேசுவின் ஆவி.

*எசே 36:26 உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.*
*27 உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்.*
*கலா 4:6 மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.*
*2கொரி 5:17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*
*யோவான்; 1;13, 3;13; எசேக்; 36;26-27 ; யோவான்; 3;13 ; 2 கொரி; 5;18 ; ரோமர்; 7:6 ; எபேசியர் 2:1,5 ;எபேசியர்; 4:24 ;கோலோசேயர்; 2:12 ; தீத்து 3:5 : 1 பேதுரு 1:23; யோவான் 1:13; யோவான்; 3;5-6*

# மறுபடியும் பிறப்பது. BORN AGAIN

## ( நம் ஆவி மறுபடியும் பிறப்பது )





அருமை சகோதரா/சகோதரி, நீங்கள் தேவனுடைய வசனத்தை கேட்டு ரட்சிக்கப்பட்ட அந்த நொடியிலேயே, உங்கள் இரட்சிப்பின் **மூன்றில் ஒரு பங்கு ரட்சிப்பு** முடிவடைந்து விட்டது. நமது ஆவிக்குரிய ரட்சிப்பு முழுமையாக முடிவடைந்து விட்டது. உங்களுடைய மறுபடியும் பிறந்த ஆவி எப்படி நித்தியமாக இருக்குமோ அவ்வாறே இப்போதும் இருக்கிறது *( 1 யோவான் 4:17 ).* இந்த மூன்றில் ஒரு பங்கு என்பது என்பது நமது பாகத்தில் இருந்து பார்க்கும்போது. ஆனால் தேவனுடைய பார்வையில் நாம் **"ரட்சிக்கப்பட்டவர்கள்** "*( ரோமர் 10:9,10 ).* தேவன் நம்மை ஆவிக்குரிய பிள்ளைகளாகவே பார்க்கிறார். ஆதாலால் ஆவிக்குரிய ரட்சிப்பு அடைந்த யாவரும் ரட்சிக்கப்பட்டவர்களே.

இப்போது மறுபடியும் பிறந்த உங்கள் ஆவி எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். ஆவியைப்பற்றி பார்க்கும் போது நாம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான காரியம், ஆவியை நாம் தொட்டோ, பார்த்தோ, உணர்ந்தோ அறிந்து கொள்ள முடியாது. ஆவியை பற்றி அறிய ஒரே வழி " வேதவசனம் நம்முடைய ஆவியை பற்றி என்ன சொல்லுகிறதோ அதை படித்து அறிந்து கொள்வது ". ஏனென்றால் வேதவசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது *( **யோவா 6:63** ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.).* நம்முடைய ஆவியை பார்க்க வேண்டுமானால் வேதவசனமாகிய கண்ணாடியில்தான் பார்க்க வேண்டும். *( யாக் 1:23-25 ).* ஆவியும் ஜீவனுமான வசனத்தை படித்து, நாம் உண்மையில் யார் என அறிந்து, தேவன் நம்மில் என்ன செய்திருக்கிறார் என்று அறிந்து, அதை விசுவாசிக்கும் போது மாத்திரமே நாம் ஒரு வெற்றிகரமான சாட்சியான விசுவாச வாழ்க்கையை காண முடியும்.

உங்களுடைய **மறுபடியும் பிறந்த ஆவியை பற்றி, அதாவது மறுபடியும் பிறந்த நீங்கள் உண்மையில் இயேசுவுக்குள் யார் என்பதை பற்றி, உங்கள் ஆவியில் என்ன என்ன நடந்திருக்கின்றன என்பதை பற்றி வேதவசனங்கள் என்ன சொல்லுகிறது** என்று பார்ப்போம்.

## 1. பரிசுத்த ஆவியால் முத்திரை ( சீல் )




***எபேசியர்; 1;13. நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.***

ஆதாம் பாவம் செய்த உடனே அவரது ஆவி தேவனோடு உள்ள தொடர்பை இழந்து அது மரித்த ஆவியாகி விட்டதே, அப்படியானால் மறுபடியும் பிறந்த விசுவாசியாகிய நான் ஏதாவது பாவம் செய்யும்போதும் உடனே என்னுடைய ஆவி மரித்த ஆவி ஆகிவிடுமா ? நானும் உடனே நித்திய மரணத்துக்கு உள்ளாக்கப்படுவேனோ ? என்ற கேள்வி உங்கள் மனதில் எப்பொழுதாவது எழுந்திருக்கிறதா? எனென்றால் எந்த ஒரு ரட்சிக்கப்பட்ட விசுவாசியும் இந்த உலகத்தில் இருக்கும் வரை ஏதாவது ஒரு விதத்தில் பாவம் செய்ய நேரிடலாம். ( மற்றவருக்காக ஜெபிக்காமல் இருப்பது, மற்றவருக்கு உதவாமல் இருப்பது, மனைவியை, கிறிஸ்து சபையை சிநேகித்தது மாதிரி சிநேகிக்காமல் இருப்பது, கணவனுக்கு, சபை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது மாதிரி கீழ்ப்படியாமல் இருப்பது, 70 கி.மீ என்று எழுதி இருக்கும் இடத்தில் 80 கி.மீ வேகத்தில் செல்லுவது, கேட்பவர்களுக்கு கொடுக்காமல் இருப்பது அனைத்தும் பாவமே ).

***எபேசியர் 1:13*** வசனம், மறுபடியும் பிறந்த ஒவ்வொரு விசுவாசியும் ஞாபகத்தில் வைக்க வேண்டிய ஒரு முக்கிய வசனம். இந்த வசனம்தான் ஆதாமின் ஆவிக்கும் நம்முடைய மறுபடியும் பிறந்த ஆவிக்கும் உள்ள ஒரு முக்கிய வேறுபாட்டை காண்பிக்கிற வசனம். அந்த வேறுபாடு என்னவென்றால் ஆதாமின் ஆவி பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டது அல்ல, ஆனால் நம்முடைய ஆவி பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டது. "முத்திரை" என்ற வார்த்தையின் ஆங்கில வார்த்தை " seal ". அதாவது அரசாங்கம் ஒரு பூட்டு போட்டு அதில் முத்திரை இட்டால் எப்படி யாரும் அந்த இடத்துக்குள் போகவோ வரவோ முடியாதோ அல்லது எப்படி ஒரு ஊறுகாய் அல்லது ஜாம் செய்து அந்த பாட்டிலை சீல் செய்து அதனுள் காற்றோ மற்ற எந்த அசுத்தங்களோ புக முடியாதவாறு செய்கிறார்களோ அந்த அர்த்தத்தில். இதன் மகாப்பெரிய உபயோகம் என்னவென்றால், நீங்கள் - a **reprobate** - கேடான சிந்தை உள்ளவர்கள்***( ரோமர்; 1;28. )***, பரீட்சைக்கு நில்லாதவர்கள்***(2 கொரி;13;5,6,7. 2 தீமோ; 3;8.)***, ஆகாதவர்கள்***( தீத்து 1;16. ),*** இயேசு கிறிஸ்துவை மனப்பூர்வமாக மறுதலிக்கிறவர்கள்***;(2;தீமோ;2;12),*** சத்தியத்தை நன்கு அறிந்த பிறகும் மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்கள் ***( எபிரேயர்; 10;26 )*** - இவ்வாறு வேதவசனம் அழைக்கிறவர்களாக மாறாத வரை, அதாவது இந்த பரிசுத்த ஆவியின் முத்திரையை நீங்களே விலக்கிக்கொள்ளாதது வரை, உங்கள் செயல்களோ, பாவங்களோ, அல்லது சாத்தானின் எந்த கிரியைகளோ உங்கள் மறுபடியும் பிறந்த ஆவியை தீட்டுப்படுத்த முடியாது. இதனால் நீங்கள் பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்கலாம் என்பது அல்ல. நீங்கள் செய்கிற பாவம் உங்களுக்கு சரீரப்பிரகாரமாக, மனோரீதியாக பிரச்சினை, பாரம், நோய், துன்பம், மரணம், அடிமைத்தனம், சாத்தானுக்கு வழி போன்ற பல கெடுதல்களை, அழிவுகளை கொடுக்கும்.***( ரோமர் 6:1,11,16, 23. யோவான் 10:10 . கலா; 6;8 ).*** ஆகவே **பாவம் செய்யாதீர்கள்.** ஆனாலும் ஏதாவது பாவம் நீங்கள் செய்யும்போது உடனே சாத்தான் உங்களை குற்றப்படுத்துவான் ***( வெளி 12:10 ).*** உங்கள் மனசாட்சி, இருதயம் உங்களை குற்றப்படுத்தும் ***( 1 யோவான் 3:20 ).*** உலகம் உங்களை குற்றப்படுத்தும். அப்பொழுது உடனே சோர்ந்து, ஏமாந்து, விழுந்து போகாதீர்கள். ஐயோ! எனது ரட்சிப்பை இழந்து விட்டேனே, அபிஷேகத்தை இழந்து விட்டேனே, தேவன் என் ஜெபத்தை இனி கேட்க மாட்டாரே என்று ஏமாற்றப்படாதீர்கள்.

***ரோம 8:32*** *தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?*

*33 தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.*
*34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே.*

தேவன் தாமே உங்களது ஆவியை, - மறுபடியும் பிறந்த உங்களை - நீதிமானாக்கி இருக்கிறார். அவரது செயல் மேல் குறை சொல்ல எந்த மனிதருக்கும், அசுத்த ஆவிகளுக்கும், சாத்தானுக்கும் உரிமை இல்லை. உங்கள் பாவங்களுக்கான விளைவுகள் உங்கள் சரீரத்தில், ஆத்துமாவில் மரணத்துக்கான, உலகப்பிரகாரமான விளைவுகளை கொண்டு வராமல் இருக்க உடனே அந்த பாவங்களை அறிக்கை இடுங்கள் *( 1 யோவான் 1:9 ).* மீண்டும் அதை செய்யாதீர்கள். நான் நீதிமான், மறுபடியும் பிறந்த நீதிமான், என் செயல்களோ சாத்தானின் கிரியைகளோ என் ஆவியை தொட முடியாது. எப்போதும் நான் தேவனிடம் எதையும் கேட்டு பெற்று கொள்வேன், நோயாளிகளை சவுக்கியமாக்குவேன், சுவிஷேஷம் அறிவிப்பேன் என்று அறிந்து அறிக்கை இட்டு மீண்டும் விழாமல் **வீறு நடை போடுங்கள்.**

## 2. நம் மறு படியும் பிறந்த ஆவி தேவனுடைய நீதி உள்ளது, பரிசுத்தமானது.

*எபேசியர்; 4;24; மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.*

ஒரு மனிதன் மறு படியும் பிறக்கும் போது , அவருடைய புதிய ஆவியின் நீதியும், பரிசுத்தமும் தேவனுடைய நீதிக்கும் பரிசுத்தத்துக்கும் இணையானது.

**நீதியில் இரண்டு வகை நீதி உண்டு**

1. **நம் சுய நீதி** ( இது நம்முடைய சுய முயற்சிகளினால், நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதனால் கிடைப்பது )
2. **தேவனுடைய நீதி.** ( இது இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதனால் மாத்திரம் கிடைப்பது )

*ஐசாயா 64:6. நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, ......*
*ரோமர் 10:3. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.*

நம் சுய நீதியை வைத்துக்கொண்டு தேவனுக்கு முன்பாக நிற்க முடியாது. தேவனுக்கு முன்பாக நிற்க அவருக்கு இணையான நீதி தேவை. எனவேதான் தேவன் அவருடைய நீதியை நமக்கு ஒரு அன்பளிப்பாக தருகிறார். இந்த நீதி நம்முடைய செயல்களினால் நமக்கு கிடைப்பது அல்ல. மாறாக இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தினால் மாத்திரமே கிடைக்கக்கூடியது.

*2 கொரி 5:21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*
*ரோமர்; 3:21; இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.*
*ரோமர் 5:17. அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*

## 3. நம் மறு படியும் பிறந்த ஆவி பூரணமாக்கப்பட்டது.

*எபிரேயர்; 12;23. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்,*
*24..........வந்து சேர்ந்தீர்கள்.*
*எபிரேயர்; 10; 14. ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.*
*கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*

இன்னும் வளர, இன்னும் உயர, இன்னும் பரிசுத்தமாக, இன்னும் தேவனோடு சேர, முயற்சிக்கிற நீங்கள் மனதிலாக்க வேண்டிய விஷயம், அவைகள் எல்லாம் நடக்க வேண்டியது நம் ஆத்துமாவில், சரீரத்தில். உங்கள் ஆவியில் நீங்கள் பரிபூரணமானவர்கள். உங்கள் ஆவியில் இன்னும் ஒரு வளர்ச்சியும் தேவை இல்லை.

### 4. நம் மறு படியும் பிறந்த ஆவியால் எந்தவித நற்கிரியைகளையும் செய்ய முடியும்.

*எபேசியர்; 2;10; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

நாம் நற்கிரியைகளால் ரட்சிக்கப்படுவது அல்ல, மாறாக நற்கிரியைகளைச் செய்வதற்காக ரட்சிக்கப்பட்டிருக்கிறோம். மறுபடியும் பிறந்த எந்த ஒரு விசுவாசியாலும் இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிற, நோயாளியின் மேல் கை வைத்து சவுக்கியமாக்குதல், சுவிஷேஷம் பிரசங்கித்தல், அற்புதங்களை செய்தல், போன்ற யாவற்றையும் செய்ய முடியும். *( மாற்கு 16:15-18; 1 கொரி 12 ம் அதிகாரம் ).*

*யோவா 14:12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.*

இயேசு செய்தது போல கிரியைகளை செய்வதற்கு **" அவரை விசுவாசித்தால் "** மாத்திரம் போதும். அப்படித்தான் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். இது மறுபடியும் பிறந்த எந்த ஒரு விசுவாசியாலும் முடியும்.

### 5. உலகத்தை ஜெயிக்கிற ஆவி.

*1 யோவான்; 5;4. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.*

நம்முடைய ஆவி தேவனால் பிறந்தது. *( 1 யோவான் 5:19 ).* அது உலகத்தை ஜெயிக்கிற ஆவி.

### 6. ஒரே ஆவி.

*1 கொரி; 6;17. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.*

நம் மறு படியும் பிறந்த ஆவி, தேவனுடைய ஆவியோடு இணைந்து இப்போது ஒரே ஆவியாக இருக்கிறது. இங்கே "ஒரே" என்ற வார்த்தைக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "heis" என்பதாகும். அதாவது இரண்டாக இல்லாமல் ஒன்று. என்ன ஒரு மகாப்பெரிய ஆசீர்வாதம். இதைப்பார்க்கத்தான் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும், தேவ தூதர்களும் துடித்துக்கொண்டு இருந்தனர். இயேசுவை உயிரோடு எழுப்பிய அதே வல்லமையோடு பரிசுத்த ஆவி இப்போது நம் ஆவியோடு கலந்திருப்பது. இந்த சத்தியத்தை நீங்கள் சரியான படி அறிந்து கொண்டால் இனிமேல் தேவ பிரசன்னத்துக்காக, பரிசுத்த ஆவியானவரை அழைப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் எங்கோ மேலே இருந்து 'இறங்கி' வருவதற்காக இசைக்கருவிகளை மெல்ல இசைத்து பாடல்கள் பாடி காத்திருக்க - அழைக்க வேண்டியதில்லை. அல்லது ஆராதனை முடிந்த உடன் பரிசுத்த ஆவியானவர் என்னை விட்டு போய்விட்டார் என்று வருத்தப்பட்டு சோர்ந்து போகவும் வேண்டியதில்லை. உங்களோடு என்றென்றைக்கும் இருக்கிற பரிசுத்த ஆவியானவரோடு எப்போதும் பேசலாம், தொழுது கொள்ளலாம், அவரோடு சேர்ந்து தேவனை மகிமைப்படுத்தலாம், ஆலோசனைகளை கேட்கலாம். புதிய உடன்படிக்கையின் மகாப்பெரிய ஆசீர்வாதம் இது. இன்று பல விசுவாசிகளும், பிரசங்கிப்பவர்களும், சபைகளை நடத்துபவர்களும் புதிய உடன்படிக்கையை பற்றி சற்றும் தெரியாமல் இருப்பதனால் அவசியம் இல்லாத கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள் மற்றவர்களையும் கஷ்டத்துக்குள்ளாக்குகிறார்கள். வேத வசனம் நம்முடைய ஆவியைப்பற்றி, ஆவியானவரைப்பற்றி என்ன சொல்லுகிறதோ அது மாத்திரமே உண்மை. மனிதர்கள் சொல்லுவது அல்ல.

*யோவா 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

*யோவா 14:17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

*யோவா 14:23 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.*
*எபி 13:5 ..........நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*
*ரோமர் 8:35-39, எபே 1:13-14.*

### 7. நம் மறு படியும் பிறந்த ஆவிக்கு எல்லாம் தெரியும்.

*1 யோவான்; **2;20**. நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.*

### 8. நம் மறு படியும் பிறந்த ஆவிக்கு இயேசு கிறிஸ்துவின் மனம் இருக்கிறது.

*1 கொரி; 2;16. கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை ( eng; mind )உண்டாயிருக்கிறது.*

### 9. நம் மறு படியும் பிறந்த ஆவி பூரண அறிவுடையதாய் புதிதாக்கப்பட்டது.

*கொலோ; 3;10. தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.*

### 10. நம் மறு படியும் பிறந்த ஆவியில் தேவனுடைய அபிஷேகம் நிலைத்திருக்கிறது.

*1 யோவான்; 2;27; நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

இந்த சத்தியம் தெரியாததால்தான் பல அருமையான விசுவாசிகளும், அனுதின வாழ்க்கையின் செயல்களால் அபிஷேகம் குறைந்து போனது என்று நினைத்துக்கொண்டு, அபிஷேக ஆராதனைகளில் போய் அபிஷேகத்தை நிறைத்துக்கொண்டு ( ? ) வந்து, பின் சில மணிக்கூர்களிலேயே அதை இழந்து, பழைய நிலைக்குள் வந்து அடுத்த முறை யாராவது அபிஷேக ஆராதனை நடத்த யாராவது வரமாட்டார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேத வசனம் சொல்லுகிறது நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் நிலைத்திருக்கிறது. அபிஷேக ஆராதனைகள் நல்லது. அவைகள் நம்முடைய சரீரத்தையும், மனதையும் ( ஆத்துமாவையும் ) உற்சாகப்படுத்தும். ஆனால் உங்கள் மறுபடியும் பிறந்த ஆவியில் நீங்கள் பெற்றிருக்கிற அபிஷேகத்தை கூட்டாது. ஆராதனைகள் அபிஷேகத்தை கூட்டும், நிறைக்கும் என்று பலரும் நினைப்பதனால்தான், ஆராதனை இல்லாத வேளைகளில் அபிஷேகம் குறைந்து போகிறது என்று பலரும் நம்பி விடுகிறார்கள். இதில் பழைய உடன்படிக்கையின் நிகழ்ச்சிகளை பார்த்து அவ்வாறே புதிய உடன்படிக்கைக்குள் இருக்கிற உங்களுக்கும் சம்பவிக்கும் என நினைக்கக்கூடாது. *( இதைப் பற்றி அதிகம் அறிய விரும்பினால், தயவாய் எமது **"பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்"** என்னும் வேதபாடத்தை படிக்கவும் )*

### 11. நம் மறு படியும் பிறந்த ஆவிக்கு தேவனோடு நெருங்கிய உறவு ( ginasko) இருக்கிறது.

*1 யோவான்; 2;13. பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.*

இங்கே, " அறிந்திருக்கிறதினால் " என்பதற்கான கிரேக்க வார்த்தை ' கினாஸ்கோ' என்பதாகும். இது ஒரு நெருங்கிய உறவை குறிக்கிறது. நம்முடைய ஆவிக்கு பிதாவோடு நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

### 12. நம் மறு படியும் பிறந்த ஆவி பாவம் செய்யாது.

*1 யோவான்; 5;18. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.*

உங்களுடைய ஆவி பரிசுத்தமானது. தேவனது நீதியை உடையது. அது பாவம் செய்யாது. நீங்கள் ஏதாவது தவறு செய்யும்போது, பாவம் செய்யும்போது, உங்கள் ஆத்துமாவும் சரீரமும் செய்கிறது. ஆனால் உங்கள் ஆவி பாவம் செய்யாது. அதனால் தேவன் எப்போதும் உங்கள் ஆவியோடு உறவு கொள்ள முடியும். உங்களது செயல்களால் உங்கள் ஆவி பரிசுத்தத்தை இழக்காது.

### 13. நம் மறு படியும் பிறந்த ஆவியை சாத்தான் தொடமுடியாது.

*1 யோவான்; 5;18. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.*

## 14. நம் மறு படியும் பிறந்த ஆவியை பிறப்பித்தது தேவன்.

*1 யோவான்; 5;19. நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.*

நீங்கள், உங்கள் மறுபடியும் பிறந்த ஆவி, தேவனால் உண்டாயிருக்கிறது. அதனால் " அப்பா ! பிதாவே என்று அழைக்கும் முழு உரிமையும் உங்களுக்கு உண்டு.

தேவன் நம்முடைய மறுபடி பிறந்த ஆவியை பற்றி சொல்லி இருக்கிற அருமையான காரியங்கள் பல இன்னும் வேத வசனத்தில் உண்டு.

அன்பு சகோதரா சகோதரி ! ஏதேன் தோட்டத்தில் தன்னோடு உலாவ வரும்படி ஆதாமை அழைத்த அதே தேவன், உங்களையும் தன்னோடு உலாவ வரும்படி, உங்கள் பெயர் சொல்லி அழைக்கும்போது நீங்கள் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும் " போன இரண்டு நாட்கள் வேதாகம் படிக்க சமயம் இல்லாத " என்னை ", ஒரு சின்ன விஷயத்துக்காக மனைவியிடம் ஆத்திரப்பட்ட " என்னை " அல்ல தேவன் அழைப்பது. உங்கள் தேவன் அழைப்பது **" என்றென்றைக்கும் பரிசுத்தமாக்கப்பட்ட உங்களது மறுபடியும் பிறந்த ஆவியை ".** இப்போது **" நம் ஆவியில் நாம் யார் "** என்கிற அடிப்படையில் மாத்திரம் தேவனோடு உறவு கொள்ள வேண்டும். நம் மாம்சத்தில், நம் ஆத்துமாவில் நாம் யார் என்ற அடிப்படையில் அல்ல.

*ரோமர் 8:9 ;தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

*2 கொரி 5:16 ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.( ginasko ).*

நாம் மாம்சத்தில் யார் ?, நாம் மாம்சத்தில் என்ன செய்கிறோம் என்ற அடிப்படையில் தேவனோடு உறவு கொள்ள முயற்சிக்கக்கூடாது. அப்படி முயற்சி செய்வதனால்தான் இன்று பல விசுவாசிகளும் ஒரு வல்லமையான வாழ்க்கை இன்றி, விழுந்து, எழுந்து, விழுந்து, எழுந்து தள்ளாடி தள்ளாடி வறுமையில் , நோயில், வேதனையில், சமாதானம் இன்றி, பயத்தோடு, குற்ற உணர்வோடு, இன்னும் ஏதாவது செய்து பரிசுத்தமாகலாம், இன்னும் ஏதாவது செய்து தேவனோடு நெருங்கலாம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவன் எல்லாம் செய்ய வல்லவர் என்று நீங்கள் பூரணமாக நம்புகிறீர்கள். ஆனால் அதை உங்களுக்கு செய்வாரா ? என்ற நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சரீரத்தில், ஆத்துமாவில் என்ன செய்கிறோம் என்ற அடிப்படையில் நீங்கள் தேவனோடு உறவு கொள்ள முயற்சித்தால் அது ஒரு போதும் நடக்காது. ஏனென்றால் உங்கள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் எப்போதும் ஏதாவது ஒரு குறை கண்டு பிடித்துக்கொண்டே இருக்கலாம்.

**நம் ஆவியில் நாம் யார் ? தேவன் நம் ஆவியில் என்ன செய்திருக்கிறார் என்ற அடிப்படையிலேயே நாம் தேவனோடு உறவு கொள்ள வேண்டும்.** அப்படி உறவு கொள்ளும்போதுதான் உங்கள் வாழ்க்கை தேவனுக்கு பிரியமான நிலையில், வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கையாக இருக்கும். எப்பொழுது, எந்த சூழ்நிலையிலும் நிரந்தரமான பரிசுத்த, பரவச, ஆவிக்குரிய, சந்தோஷ, வெற்றிகரமான வாழ்க்கையாக இருக்கும்.

## நம் ஆவியில் இருக்கிறவைகள் எல்லாவற்றையும் நம் வாழ்க்கையில் நடைமுறைக்கு கொண்டு வருவது எப்படி?

தேவன், நம்முடைய ஆவியில் நடந்திருக்கிற மாற்றங்கள் எல்லாம் நம்முடைய வாழ்க்கையில், நம் ஆத்துமாவில், சரீரத்தில் வெளிப்பட வேண்டும் என விரும்புகிறார். ஏதோ ரட்சிக்கப்பட்டோம், மறுபடியும் பிறந்தோம், இவை எல்லாம் நம் மரணத்துக்கு பிறகு அல்லது இரண்டாம் வருகைக்கு பிறகு பரலோகத்தில் மாத்திரமே உபயோகமாக இருக்கும் என்பதற்காக தேவன் இதை நம் வாழ்க்கையில் செய்ய வில்லை. இந்த அறியாமையினால் பலரும் இரட்சிப்பின் முழு பலன்களையும் இந்த உலகத்திலேயே அனுபவிக்காமல், எப்போது என் இயேசு வருவார் இந்த பூமியில் என் கஷ்டங்கள்

எல்லாம் எப்போது மாறும், நான் பரலோகத்தில் போன பிறகுதான் நிம்மதியாக இருப்பேன் என நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

*கலா 1:4 அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;*

இப்போது நாம் வாழ்கிற உலகத்திலேயே ஒரு வல்லமை உள்ள வாழ்வு வாழ்வதற்காகவும் நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். நாம் பெற்ற ரட்சிப்பு நம்முடைய உலக வாழ்க்கையிலும் வெளிப்பட வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். அதை எவ்வாறு நடை முறைப்படுத்துவது ? நம் ஆவியில் இருக்கிற சகல ஆசீர்வாதங்களையும் நம்முடைய பௌதீக வாழ்க்கையில் கொண்டு வருவது எப்படி ? தேவன் நமக்கு எவ்வளவு வல்லமை, அதிகாரம், பெலம், அபிஷேகம், ஆசீர்வாதம், விடுதலை, சுகம், செழிப்பு, சமாதானம்.... தரமுடியுமோ அவ்வளவு நம் ஆவியில் தந்திருக்கிறார். இனி ஒரு விசுவாசி தேவனை அசைத்து எதையும் பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை. தேவன் தந்திருக்கிற சகலத்தையும் தன் ஆவியில் இருந்து மனதில், சரீரத்தில் கொண்டு வருவது எப்படி என்று அறிந்து கொண்டால் போதும்.

***ரோம 12:1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.***
***ரோம 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.***

### 1. சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இரட்சிப்புக்காக ஒரு நாள் நமது வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தது சரி. ஆனாலும் அதோடு நிறுத்தி விடாமல் நமது வாழ்க்கையை அனுதினமும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இது ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். இதை நாம்தான் செய்ய வேண்டும். இதை நமக்காக தேவனோ, மற்ற ஒரு ஊழியக்காரரோ செய்ய முடியாது. பழைய ஏற்பாட்டின் பலிகள் பலிபீடத்தில் சமர்ப்பிக்கப்படும்போது மரித்ததாக இருக்கும். ஆனால் புதிய ஏற்பாட்டின் பலிகள் " ஜீவ பலியாக " இருக்க வேண்டும். அதாவது " வாழுகிற " பலியாக இருக்க வேண்டும். இதன் அர்த்தம், என்றோ ஒரு நாள் மாத்திரம் முழுவதுமாக சமர்ப்பிக்கப்பட்ட வாழ்க்கையாக இல்லாமல் அனுதினமும் நமது சுய இச்சைகளுக்கு மரிக்கிற வாழ்க்கையாக, அனுதினமும் நம்மை தேவனுக்கென்று சமர்ப்பிக்கிற வாழ்க்கையாக இருக்க வேண்டும். அப்போது தேவன் நம்முடைய ஆவியில் செய்திருப்பதை நம்முடைய சரீரத்தில் நம் மனது வழியாக கொண்டு வர முடியும்.

### 2. மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.


*ரோமர் 12:2* இப்படியாக தொடங்குகிறது *' நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் '.* இதற்கு அர்த்தம் விசுவாசிகளான நீங்கள் இந்த உலகத்தாரை போல இல்லாமல் வித்யாசமாக இருக்க வேண்டும். அவர்களையும் நம்மையும் ஒப்பிடும்போது ஒரு வேறுபாடு காணப்பட வேண்டும். ஒரு மறுபடியும் பிறந்த விசுவாசியிடம் ஒரு வேறுபாடு இருக்க வேண்டும். இதை எப்படி செய்வது ? **" மனம் புதிதாகிறதினாலே மறுரூபப்படுவதன் மூலம் ".**

இங்கே "மறுரூபம்" என்னும் வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை " மெற்றமார்பொ" என்பதாகும். இதில் இருந்துதான் metamorphosis என்னும் ஆங்கில வார்த்தை வந்தது. அதாவது ஒரு புழு உருமாறி எப்படி பட்டாம்பூச்சி ஆகிறதோ அப்படி. ஒரு மனிதர் ரட்சிக்கப்படும்போது அவரது ஆவியின் ரட்சிப்பு முடிவடைந்தது. அவரது ஆத்தும ரட்சிப்பும், சரீர ரட்சிப்பும் ( ஆவிக்குரிய சரீரத்தை பெறுதல், மறுரூபமாக்கப்படுதல் ) பின்னால் நடக்கும். ***( ரோம 8:23 , எபி 10:39, பிலி 3:21, 1 யோவான் 3:2, 1 கொரி 15 ).*** ஆனாலும் நாம் நம் **" மனதை புதுப்பிப்பதனால் "** மறுரூபமாகி நாம் ஆவியில் பெற்றிருப்பவற்றை இப்போதே நம் வாழ்க்கையில் வெளிப்படுத்த முடியும்.

### மனதை எவ்வாறு புதுப்பிப்பது ?

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, ஆவி - ஆத்துமா - சரீரம் என்ற முறையிலேயே சிருஷ்டித்தார். அதாவது நம்முடைய ஆவியே முதன்மையாக இருந்து அதன் கட்டுப்பாட்டில் ஆத்துமாவும், ஆத்துமாவின் கட்டுப்பாட்டில் சரீரமும் இயங்க வேண்டும். இதுவே தேவனுடைய சித்தம். நம்முடைய ஆத்துமாவின் மூன்று பகுதிகளாகிய மனம், உணர்ச்சிகள், சித்தம் இவற்றில் **" மனது "** நமது

ஆவிக்கும் சரீரத்துக்கும் இடையில் ஒரு "வால்வு" போல இயங்குகிறது. *ரோம 8:6 மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.* நாம் நம் மனதில் எதை சிந்திக்கிறோம்




என்பது மிகவும் முக்கியமாகும். *நீதி 23:7 அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்..........* நாம் நம் மனதில் என்ன சிந்திக்கிறோமோ அப்படியே ஆகிறோம். நம் மனது எப்போதும் உலகப்பிரகாரமாக சிந்தித்து, மாம்சத்துக்குரியவைகளையே சிந்திக்கும். அதை தடுத்து, **வேதவசனம் நம்மை பற்றி என்ன சொல்லுகிறது என்று படித்து, தியானித்து, அவரோடு உறவாடி, அவர் மேல் நம் மனதை பதித்து** *( ஐசா 26:3 )* **இருக்குமாறு நம் மனதை பழக்க வேண்டும்.** அவ்வாறு செய்யும்போது நம் மனது " புதிதாகிறது ". இதையே மனதை புதுப்பித்தல் என்று வேதாகமம் அழைக்கிறது. இது ஒரு நாள், இரண்டு நாள் பழக்கம் அல்ல. நமது வாழ்க்கையின் வழக்கமாக இது இருக்க வேண்டும். அப்படி செய்யும்போது, ஒரு வால்வு போல இருக்கிற மனது நம் ஆவிக்குள் இருப்பதை நம் சரீரத்துக்குள் வர அனுமதிக்கும்.

இப்படியாகத்தான் நாம் மறுரூபமாகி, நம் ஆவியில் இருப்பதை நம் அன்றாட வாழ்க்கையில் வெளிப்படுத்தி, ஒரு வெற்றி உள்ள விசுவாசியாக வாழ முடியும்.

*பிலே 1:6 உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன்.*
இப்படி நம்மிடம் உள்ள சகல நன்மைகளும் தெரியப்படும்போது நம்முடைய விசுவாச வாழ்க்கை நமக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் பயனுள்ள வாழ்க்கையாக இருக்கும்.

அன்பு சகோதரா/சகோதரி. மறுபடியும் பிறந்த நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள் யார் என்றும், உண்மையான " **நீ** " யார் என்றும் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இனி உங்கள் விசுவாச வாழ்க்கை **" மனம் புதிதாவதினால் "** மறுரூபமாக்கப்படுகிற வாழ்க்கையாக இருக்கட்டும். நீங்கள் உண்மையில் யார் என்று வேதாகமம் சொல்லுகிறதோ அதன் படியே நினையுங்கள், செய்யுங்கள், வாழுங்கள். ஆழ்ந்து வேதாகமத்தை தியானியுங்கள். ஏதாவது ஒரு subject - விஷயத்தை பற்றி அறிய வேண்டுமென்றாலும், சாதாரணமாக செய்யப்படும் பிரசங்கங்களை, பாடல்களை, ஊழியக்காரர்களின் வார்த்தைகளை மாத்திரம் நம்பி ஏமாறாதீர்கள். ஒரு நல்ல Bible concordance ( ex. Vines expository dictionary, Strongs concordance, etc.. ) வாங்கி அதில் இருந்து படித்து அறிந்து கொள்ளுங்கள். அதோடு கூட வேதாகமத்தில் ஏதாவது வசனத்துக்கு விளக்கம் தேவைப்பட்டால் நல்ல ஒரு கமெண்றி - commentary ஐயும் வாங்கி உபயோகியுங்கள். ஒரு வல்லமையான புதிய விசுவாச வாழ்க்கைக்கு இந்த வசனங்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும்படியாக உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.
**ஆமென்.**

இதை தயாரிக்க உபயோகப்படுத்தப்பட்டவை: **;** Dakes bible commentary, Adam Clarke's bible commentary, Barnes' Notes on the New Testament, Andrew Wommack bible commentary, Vine's expository Dictionary of New Testament words, Strongs bible concordance, Watchman nee’s “The Normal Christian life, The spiritual man. Spirit,soul and Body. Donkrow’s Who you are in Christ.. Easton's Illustrated Dictionary etc..All bible quotes are from King James Version. )

------------------------